## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 53/2023 | Date : 03.06.2025 | PW 3 |
|---|---|---|
| Name: மாதேஷ் | த/பெ. பழனியப்பன் | |

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. நிலம் மானாவரி நிலமா என்றால் மானாவரி பயிரும் உண்டு. பணப்பயிரும் உண்டு. என்னுடைய விவசாய பூமி மற்றும் வீடு அனைத்தும் ஒன்றாக அமைந்துள்ளதா என்றால் ஆமாம். நங்கவள்ளி – மேச்சேரி ரோட்டின் கிழக்கே என்னுடைய நிலம் அமைந்துள்ளது. வாதி சீனிவாசன் என்னுடைய பங்காளி ஆவார். நான் தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேனா என்றால் ஆமாம். நான் வாதி சீனிவாசனுடன் கூட்டாக தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேனா என்றால் இல்லை. வாதி சீனிவாசனின் தகப்பனார் எவ்வளவு சொத்துக்களை சீனிவாசனுக்கும் அவருடைய முதல் மனைவிக்கும் எழுதி வைத்தார் என்றால் சுமாரா 4 ஏக்கர் எழுதி வைத்தார். 1 ஆம் பிரதிவாதி கண்ணனுக்கும் அவருடைய தகப்பனார் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சீனிவாசனுக்கு எழுதி கொடுத்த சொத்துக்கள் அவருடைய சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றால் சரிதான். சீனிவாசன் மேற்படி வகையில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர் சர்வ சுதந்திரமாக அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். சீனிவாசன் அவருக்கு பாத்தியப்பட்ட மேற்படி சொத்துக்களை யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்ய அவருக்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். அதே போல் 1 ஆம் பிரதிவாதிக்கு அவருடைய தகப்பனார் எழுதி வைத்த சொத்துக்களை அவர் தனிப்பட்ட வகையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவருடைய அனுபவத்தில் தான் உள்ளது. 1 ஆம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்ய அவருக்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் நான்கு எல்லை விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதே போல் தவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் நான்கு எல்லை விவரங்கள் மற்றும் விஸ்தீரணங்கள் எனக்கு குறிப்பாக தெரியுமா என்றால் தெரியாது. நங்கவள்ளி – மேச்சேரி ரோட்டின் கிழக்கே கெச்சம் பட்டி கிராமம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த கெச்சம்பட்டி ரோட்டை ஒட்டியவாறு 1 ஆம் பிரதிவாதிக்கு

பாத்தியப்பட்ட நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்து உள்பக்கமாக சுமார் 300 அடி தள்ளி ரோட்டை ஒட்டி மேற்கு புறமாக முனியப்பன் கோவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டின் வழியாக முனியப்பன் கோவிலுக்கு சென்றுவர வழி உள்ளது என்றால் இல்லை. அவ்வாறு வழி உள்ளது என்றாலும் வாதிக்கு சாதகமாக இந்த வழக்கிற்காக அவ்வாறாக முனியப்பன் கோவிலுக்கு சென்று வர மேற்படி வகையில் வழி இல்லை என்று சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ரோட்டை பார்த்தவாறு முனியப்பன் கோவில் உள்ளது என்றாலும், 1ஆம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் 10 அடி அகலத்திற்கு 300 அடி நீளத்திற்கு 3000 சதுர அடி நிலத்தை மேற்படி கோவிலுக்காக பாதைக்காக விட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதி என்னுடைய பங்காளிகள் என்ற நிலையிலும், நான் மேற்படி நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர் என்ற நிலையிலும் மேற்படி சங்கிதிகள் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் பெற்றோரின் இறப்பு குழி உள்ளதாக சொல்லியுள்ள சங்கதி பொய் என்றாலும், மேற்படியாரின் பெற்றோரின் சடலங்கள் புதைக்கப்படவில்லை மாறாக எரிக்கப்பட்டுவிட்டது என்றாலும் சரியல்ல. அவர்களின் அம்மா சடலம் புதைக்கப்பட்டுள்ளது. அப்பா சடலம் மட்டும் தான் எரிக்கப்பட்டது. அவ்வாறு நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தான் அவருடைய பெற்றோர்களை கவனித்து வந்தார் என்றாலும் 1ஆம் பிரதிவாதி கவனிக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1968ம் வருடம் 1ஆம் பிரதிவாதி ஈரோட்டில் உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் கிளார்க்காக பணியில் சேர்ந்து பணியாற்றி பெற்றோரை பராமரித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ஆம் பிரதிவாதியின் அவருடைய அம்மா வயிற்கு ஆப்ரேஷன் அப்பாவிற்கான கேன்சர் மருத்துவம் ஆகிய அனைத்திற்குமான செலவை 1ஆம் பிரதிவாதிதான் செய்தார் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஈரோட்டில் உள்ள PAI மருத்துவமனையில் 1985ம் வருடத்தில் சுமார் 41 நாட்கள் உள்நோயாளியாக வைத்து 1ஆம் பிரதிவாதி சிகிச்சை அளித்து வந்தார் என்றால் சரியல்ல. அதே போல் 1ஆம் பிரதிவாதி கோயமுத்தூரில் பணியாற்றிய போது 1980ல் கோயமுத்தூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அவருடைய

அம்மாவை உள்நோயாளியாக வைத்து வயிற்றில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு சிகிச்சை அளித்தார் என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது. வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் சகோதரரான நல்லதம்பிக்கு பேச்சு சரியாக வராத காரணத்தினால் ஈரோட்டில் உள்ள காது மூக்கு தொண்டை நிபுணர் முத்துசாமி மருத்துவமனையில் 1ஆம் பிரதிவாதி அவரது சொந்த செலவில் அறுவை சிகிச்சை மற்றும் சிகிச்சை செலவு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சகோதரி வைரத்தை தவிர மீதமுள்ள சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் 1ஆம் பிரதிவாதி அவரது சொந்த செலவில் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. அவரது தகப்பனார்தான் திருமணம் செய்து வைத்தார். 1ஆம் பிரதிவாதியின் தகப்பனாரின் கடைசி காலங்களில் அவருக்கு ஓட்டலில் உணவு வழங்க செய்து 1ஆம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்டதான மொத்த சொத்தும் அவரது தகப்பனாருக்கு சுயாஜித கிரய சொத்துக்கள் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி நிலத்தை விற்பனை செய்ய போவதாக சொல்லியுள்ள விவரம் வாதி சீனிவாசன் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி நிலங்களை விற்பனை செய்ய போவதாக யார் சொல்லி எனக்கு தெரியவந்தது என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடன் பிறந்தவர்கள் அண்ணன் ஒருவர் தங்கை மூவர் ஆவார்கள். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு இறப்புக்குழி என்று ஒன்று கிடையாது என்றாலும் கெச்சாம்பட்டி ரோட்டு வழியாக முனியப்பன் கோவிலுக்கு சென்றுவரலாம் என்றாலும் சரியல்ல. கெச்சாம்பட்டி ரோடு வழியாக முனியப்பன் கோவிலுக்கு செல்ல இயலாது. 1ஆம் பிரதிவாதி சொத்தை வாதி விலைக்கு கேட்டாரா என்ற விவரம் எனக்கு குறிப்பாக தெரியாது. அதேபோல் மாணிக்கவேல், எம்.எம்.ரத்தினம் ஆகீயோர் பஞ்சாயத்து பேசியதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. அவர்கள் பலமுறை பேசினார்கள். எவ்வளவு ரூபாய்க்கு பேசினார்கள், எவ்வளவு நாட்களுக்குள் பணம் கொடுப்பதாக சொன்னார்கள் ஆகிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 12.02.2023 ந்தேதி புரோக்கர்களை கொண்டு நிலத்தை அளப்பதாக தகவல் கேள்விப்பட்டு நாங்கள் 4, 5 பேர் மேற்படி இடத்திற்கு சென்றதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. நாங்கள் போய் கேட்டோம். நான், மாணிக்கம், முருகன், ரத்தினம், வீரமுத்து ஆகியோர் சென்று கேட்டோம்.

அவ்வாறு நாங்கள் சென்று 1 ஆம் பிரதிவாதியிடம் வாதிக்கு நிலத்தை விற்பனை செய்ய கேட்டதாக வாதி தன்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கு அவர்களது தகப்பனாரால் எழுதி கொடுக்கப்பட்ட பத்திரங்களில் மேற்படி கோவிலுக்கு சென்று வரும் வழி மற்றும் சவக்குழிக்கு சென்று வரும் வழி ஆகியவை குறித்து எழுதப்பட்டுள்ளதா என்றால் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கே நிலை நிறுத்தத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதி பெயரிலான கூட்டு பட்டாவை பிரித்து தனிப்பட்டா வழங்க கோரி 1 ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் நில அளவையர் மூலமாக மேற்படி சொத்தை அளவீடு செய்ய முயற்சித்த சமயத்தில் வாதியும், அவரது முதல் மனைவியும் அதை தடுத்துவிட்டனர் என்றால் சரியல்ல. அது அளவீடு செய்யப்பட்டது. அளவீடு செய்யப்படவில்லை என்றாலும், வாதி 1 ஆம் பிரதிவாதியின் பெயரில் தனிப்பட்டா கிடைக்கக்கூடாது என்ற காரணத்திற்காக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

ஒம்/—மாதேஷ்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—A.சண்முகப்பிரியா
சார்பு நீதிபதி,
மேட்டூர்.